TCAV

# TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA

## விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

# Messenger
# தூதுவன்

Christmas Edition
கிறிஸ்து பிறப்பு வெளியீடு
December - 2019



Week 1
**HOPE**



Week 2
**FAITH**




**Reminds us...**
Jesus is Coming

**Bible Verse**
Roman 15: 12-13

**Reminds us...**
To prepare the way of the lord

**Bible verse**
Luke 3:4-6

**Bible Verse**
Luke 2:10

**Reminds us...**
The Joy at the coming birth of Jesus

**Bible verse**
Luke 2:14

**Reminds us...**
"Glory to God in the highest heaven, and on earth peace for those he favours



Week 3
**JOY**

Week 4
**PEACE**



**இனிய கிறிஸ்துமஸ் மற்றும்**
**புது வருட வாழ்த்துக்கள்**

*With Best Compliments from*

# PERPETUA MONEY TRANSFER

**WorldWide**

## We Guarantee the best rate for

## SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE



- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVENIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

## Send Money to any Bank in Sri Lanka

**Direct Deposit**

Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478
Email: pmoneytransfer@ymail.com

# கிறிஸ்த்துமஸ் செய்தி 2019



**வந்தாயய்யா..... வந்தாயய்யா....**
**வாழ்வை மீண்டும் தந்தாயய்யா....**

'காரிருளில் நடந்த வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள்...' – எசாயா 9:2

அது தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் தெருவில் நின்ற காலம். ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்ட காலகட்டம். தாவீது இஸ்ரேயலை ஆட்சி செய்த போது வளமோடும் நலமோடும், மகிழ்வோடும் புகழோடும் வாழ்ந்த இஸ்ரேயல் மக்களின் வாழ்வு அவர் மகன் சாலமோன் மன்னனின் ஆட்சிக்குப்பின் இருள் கவ்விக்கொண்டது என சொல்லலாம். தேசம் இரண்டாக உடைந்தது. பின் வரும் காலங்களில் வந்த மன்னனும் மக்களும் இறைவனோடு கொண்ட உடன் படிக்கையை மீறியதின் காரணமாகவும் வேற்று தெய்வங்களை நாடிச்சென்றதாலும் இஸ்ரேயல் வலுவிழந்து வேற்றுஅரசுகளிடம் அடிமைகளாயின. அதன் விளைவு நிலங்களை இழந்தனர், நாடுகடத்தப்பட்டனர், இஸ்ரேயல் மக்களின் பெருமைக்குரிய பேராலயம் இடித்து தரைமட்டமாக்கபட்டது. இஸ்ரேயல் மக்கள் தங்களின் முகமிழந்து முகவரி இழந்து பாபிலோன் நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டனர். வாழ்வில் வெறுமையும், வலிகளும், வேதனைகளும் நிறைந்த தங்கள் வாழ்வை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து புதுவாழ்விற்கு அழைத்துச்செல்ல மெசியாவா வருவார். அவர் தாவீதின் மகனாக நம்மத்தியில் வாழும் கடவுளாக விரைவில் தோன்றுவார் என்று இறைவாக்கினர்கள் எடுத்துரைக்க மெசியாவின் வருகைக்காக இஸ்ரேயல் மக்கள் பல ஆண்டுகாலங்கள் காத்திருந்தனர்.

அவர்கள் காத்திருந்த காலம் கனிவுற்றபோது இறைவாக்கினர்களின் இறைவாக்குகளுக்கு ஏற்ப தம் மக்களை அன்பு செய்யவும் அனைத்துவிதமான அடிமைதனங்களிலிருந்து விடுவிக்கவும். இறைவன் மனிதனானார். வரலாற்றில் இறைவன் மனிதனாக கடவுள் நம்மோடான அந்த மகத்தான நிகழ்வு ஒரு கடந்த கால நிகழ்வு அல்ல அது தினம் தினம் நிகழும் நிலையான நிகழ்கால நிகழ்வு.

இன்று நாம் வாழும் வாழ்க்கைக்கும் பழைய இஸ்ரேயல் மக்களின் வாழ்க்கைக்கும் அப்படி பெரிதாக ஒன்றும் வேறுபாடுகள் இல்லை. இன்று பயங்கரவாதம் என்ற கார்மேகம் இந்த பூமியின் மேற்பரப்பை சூழ்ந்து அச்சமூட்டுகிறது. போர்கள், தீவிரவாத தாக்குதல்கள், ஈவு–இரக்கமற்ற படுகொலைகள், அடக்குமுறைகள், ஆவணக்கொலைகள் என பாதுகாப்பற்ற ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம்.



இரவில் உறங்காமல் விழித்திருந்து பாதுகாக்கும் ஆட்டுஇடையர்கள் போலவே இன்று இரவிலே அனைவரும் உறங்கிய பின்னும் தம் குடும்பத்தை குறித்த கவலைகளாலும், கடன் சுமையாலும் கண்ணயராது பல பெற்றோர்கள் கவலைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகில் பலரும் கண்ணீரோடு படுக்கையறைக்கு சென்று கவலைகளோடே வாழ்ந்தும் வருகின்றனர். அப்படிப்பட்ட கவலைகள் நம்மையும் இடைவிடாது துரத்திக்கொண்டுதான் இருக்கின்றன. நம் குழந்தைகளை பற்றி, அவர்களின் தகாத நட்புறவுகளை மற்றும் அவர்களின் எதிர்காலம் பற்றி, வேலை

நிரந்திரமின்மை மற்றும் பணித்தல அழுத்தங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடிகள், நோய் மற்றும் மருத்துவ செலவுகள் குறித்தும், கணவன் மனைவிக்கிடையேயான உறவு சிக்கல்கள் என பல்வேறு கவலைகளோடும் கண்ணீரோடும் வாழும் சூழலில் கிறித்துவின் பிறப்பு மாபெரும் மகிழ்ச்சியின் விடுதலைச் செய்திளை தருகிறது.

அந்த செய்தி என்னவென்றால் இறைவன் நம்மோடு இருக்கிறார். நம் அருகில் இருகிறார். நமக்கு ஆறுதலாகவும் அடைக்கலமாகவும் இருக்கிற இறைவன் நம்மை அன்பு செய்கிறார். நம் வாழ்வில் எல்லாவிதமான சூழலிலும் நம்மோடு இருக்க விரும்புகிறார்.

2000 ஆண்டுகளுக்கு முன் பெத்லகேமில் நடந்த நிகழ்வு ஒரு துவக்கமே தவிர முடிவல்ல. இன்றும் நம் ஒவ்வொருவரையும் தேடி இறைமகன் இயேசு பல்வேறு விதங்களில் நம்மத்தியில் பிறந்து கொண்டுதான் இருக்கிறார்.

கிறிஸ்த்து பிறப்பின் சூழலை சற்று எண்ணிப்பாருங்கள் ஏரோது மக்கள் தொகை கணக்கிட அரசாணை பிறப்பிக்கிறான். அதை தொடர்ந்து சூசை பேறுகாலத்திலிருக்கும் மரியாவை அழைத்துக்கொண்டு பெத்தலகேம் பயணிக்கிறார். கடினமான பயணம், தங்க இடமில்லை, உதவிக்கு ஆளில்லை என இத்தனை இடர்பாடுகள். ஆனால் இத்தகைய இடர்பாடுகளுக்கு மத்தியில் தான் துயர்துடைக்கும் நம்பிக்கையாக, இருள் அகற்றும் ஒளியாக இறைவன் பிறந்தார்.

வாழ்வின் ஏற்றங்கள், ஏமாற்றங்கள், வெற்றி தோல்விகள், கவலை கண்ணீர்கள், வேதனைகள் இவற்றுக்கு மத்தியில் கிறிஸ்த்துவின் பிறப்பானது நமக்கு நம்பிக்கையை தருகிறது. கிறிஸ்து நம்மோடு என்ற செய்தி நமக்கு பெறும் ஆற்றலைத் தருகிறது. ஆறுதலாய் இருக்கிறது.

யாருக்கு தான் வாழ்வில் பிரச்சனைகள் இல்லை. இறைவனே இப்பூமியில் பிறக்கும் போது கவலையோடும், கண்ணீரோடும் தான் பிறந்தார். உடைந்த உள்ளங்களின் வேதனை அவருக்கு புரியும். மனித வாழ்வின் அனைத்து வலிகளும் அவருக்கு தெரியும். வானில் சுடர்விடும் ஒளியாகவோ அல்லது மேகத்தை கிழித்து பெரும் ஒலியாகவோ அவரால் இவ்வுலகில் தோன்றியிருக்க முடியும். ஆனால் அவர் ஒரு குழந்தையாக பிறந்தார். மனிதரை போல அல்ல, மனிதராகவே பிறந்தார். பல வேலைகளில் பாலகன் இயேசுவை கடவுளின் மகன் என உயர்த்திப்பிடிக்கிற முனைப்பில் ஒரு மனித குழந்தையாக அவர் அனுபவித்த இன்னல்களை, துயரங்களை மறந்துவிடுகிறோம். இறைவன் ஒரு சாதாரண குழந்தையாக, பிறரை சார்ந்து வாழும் அளவிற்கு கையாலாகாத ஒரு நிலையில்தான் பிறந்தார் என்பதை உணரும் போது மாட்டுத்தொழுவத்தில் கால்நடைகளுக்கிடையிலும், ஆட்டு இடையர்களுக்கு இடையிலும் கந்தல் துணிகளுக்குள் பிறக்க சித்தமான இறைவன் நம் வாழ்வின் எந்த விதமான சூழளிலும் பிறப்பார். நமக்கு ஆற்றல் தருவார். ஆறுதல் தருவார், மாற்றம் தருவார், முன்னேற்ற வைப்பார், விடுதலை தருவார், வெளிச்சம் ஏற்றுவார் என்ற நம்பிக்கை வைப்போம். அத்தகைய நம்பிக்கையோடு இந்த கிறிஸ்த்துமஸ் திருவிழாவை கொண்டாடுவோம்.

# Christmas Message

கிறிஸ்து பிறப்பு விழா, பிறந்தநாள் என்றாலே எமக்கு மகிழ்ச்சி அதிலும் எமது மீட்பர் இவ்வுலகை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்த மெசியா, அவரின் பிறந்தநாளை கிறிஸ்து பிறப்பு விழாவாக கொண்டாடுவது எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி அதுமட்டுமின்றி அவர் இவ்வுலகிற்கு வந்த நோக்கமான பாவத்திலிருந்து விடுபட்டு சகலரையும் அன்புசெய்து அரவணைத்து ஆதரவளித்து வாழ இப்பண்டிகை காலத்தில் சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளோம்.

இந்த நோக்கத்தை நமது நாளாந்த வாழ்வில் கடைப்பிடித்து வாழ நமது விக்டோறிய தமிழ் கத்தோலிக்க சங்கம் பல ஏற்பாடுகளை வருடம்தோறும் எடுத்துவருகிறது. எவ்வளவுதான் ஆங்கிலம் தெரிந்தாலும் தமிழ் திருப்பலிப்பூசையில் பங்குபெறுவதில் உள்ள திருப்திக்கு ஈடாகாது. அதுமட்டுமின்றி விக்டோரிய மாநிலத்தில் பரந்து வாழும் தமிழ் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் நமது குடும்ப நிகழ்வுகளை ஞானக்காரியங்களை தமிழ் குருவானவர்மூலம் நிறைவேற்ற விரும்புகிறோம். அதற்கு எமக்கு ஒரு ஞானத்தந்தையின் சேவை தொடர்ந்து தேவைப்படுகிறது. இந்த சேவையை, தேவையை நாம் தொடர்ந்து பெறவேண்டுமானால் நாம் செய்யவேண்டியது மாதம்தோறும் எமது பகுதிகளில் நடைபெறும் 2ம்,3ம்,4ம் ஞாயிறு தமிழ் திருப்பலிப்பூசைகளில் பெருமளவில் பங்குபற்றி பலன்பெறவேண்டுமென்று கேட்டு நிற்கின்றோம்.

தொடர்ந்து நாம் தமிழ் பேசும் கத்தோலிக்கர்களாக எமது ஞான வாழ்வில் சிறப்புற்று வாழவும் வரும் கிறிஸ்து பிறப்பு விழா எம் அனைவருக்கும் ஒரு புதுவாழ்வின் பிறப்பாகவும், புத்துணர்ச்சி அளிக்கும் பெருநாளாகவும் இருக்க உங்கள் அனைவரையும் மனமார வாழ்த்துகிறேன்.

May I wish all of you a

*Merry Christmas and a Happy New Year*



**பிரித்விராஜ் வேதநாயகம்**
தலைவர்
தமிழ் கத்தோலிக்க சங்கம் விக்டோறியா

# திருத்தந்தையிடம் இருந்து...

## டிஜிட்டல் உலகில் குழந்தையின் மாண்பு காக்கப்பட...

டிஜிட்டல் உலகின் தொழில்நுட்பங்கள், இளையோரை, பெரும் தீமைகளுக்கு அழைத்துச் செல்வதை உணர்ந்து, அத்தீமைகளிலிருந்து அவர்களைக் காப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் – திருத்தந்தை பிரான்சிஸ்

சமூக வலைத்தளங்களில் சிறுவர், சிறுமியரை தவறான முறையில் பயன்படுத்தாமல், அவர்களுக்கு உரிய மாண்பை வழங்கும் முயற்சியில், அனைத்துத் துறைகளும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

டிஜிட்டல் உலகம் கண்டுபிடித்துவரும் பல்வேறு தொழில்நுட்பங்கள், மக்களுக்கு குறிப்பாக, இளையோருக்கு பெரும் உதவியாக உள்ளன என்பதை நாம் மறுக்கமுடியாது என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, இதே தொழில் நுட்பங்கள், இளையோரை பெரும் தீமைகளுக்கும் அழைத்துச் செல்வதை உணர்ந்து, அத்தீமைகளிலிருந்து அவர்களைக் காப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குழந்தைகளைக் கொண்டு உருவாக்கப்படும் ஆபாச வலைதளங்கள், மனித வர்த்தகம், பாலியல் கொடுமைகள் ஆகியவற்றை வளர்க்கின்றன என்பதை தன் உரையில் கவலையுடன் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகையக் கொடுமைகளுக்கு உள்ளாகும் குழந்தைகளும், சிறுவர் சிறுமியரும் தங்கள் வாழ்வு முழுவதையும் வேதனையில் கழிக்கும் தண்டனைக்கு உள்ளாகின்றனர் என்று கூறினார்.

சிறுவர், சிறுமியரை டிஜிட்டல் வழியில் தவறாகப் பயன்படுத்தும் நிறுவனங்களை தண்டிக்கும் மற்றும் தடுத்து நிறுத்தும் வழிமுறைகளை அரசுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் அழைப்பு விடுத்தார்.

தொடர்புத் துறையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை உருவாக்கும் பல்வேறு நிறுவனங்கள், தங்கள் பணி, தொழில் நுட்பத்தோடு நின்று விடுகிறது என்று சாக்கு சொல்லி தப்பித்துக்கொள்ளக்கூடாது என்பதையும், அவர்கள் உருவாக்கும் தொழில்நுட்பங்கள், தகுதியான முறையில் பயன்படுத்தப்படுவதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட அடையாளங்கள் டிஜிட்டல் முறையில் பதிவாகும் இன்றையச் சூழலில், குறிப்பாக, குழந்தைகள் மற்றும் சிறுவர், சிறுமியரின் தனிப்பட்ட அடையாளங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வழிகளையும் டிஜிட்டல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மக்கள் நடுவே அறிமுகம் செய்வது அவர்களது கடமை என்பதையும் திருத்தந்தை தன் உரையில் வலியுறுத்திக் கூறினார்.

நம்மைச் சுற்றியுள்ள குழந்தைகளின் கண்களை நேருக்கு நேர் காணும்போது, அவர்களை இறைவனின் ஒப்பற்ற கலைப்படைப்பாகக் கண்டு, அவர்களுக்கு உரிய மாண்பை வழங்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நல்லதொரு வாழ்வை அமைத்துக்கொள்ளும் உரிமை பெற்றுள்ளது என்பதை அனைவரும் உணரவேண்டும் என்றும் கூறி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையை நிறைவு செய்தார்.

# உலக அமைதிக்காக வலைத்தளத்தில் செபமாலை



திருத்தந்தையின் உலகளாவிய செப வலையமைப்பு ஆரம்பிக்கபட்டதன் 175ம் ஆண்டு கொண்டாத்தின்போது, திருஅவையின் தூதுரைப்பணியின் மையம், செபம் என்று திருத்தந்தை கூறினார்.

பாரம்பரிய செபமான, செபமாலை செபிப்பதில் இளையோரை ஈடுபடுத்தும் புதிய வழி ஒன்றை, திருத்தந்தையின் உலகளாவிய செப வலையமைப்பு அறிமுகப்படுத்தியுள்ளது. வலைத்தளம் வழியாக, உலக அமைதிக்காக செபமாலை செபிக்கும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் உலகளாவிய செப வலையமைப்பு, "Click To Pray eRosary" என்ற செயலியை, அக்டோபர் 15, அறிமுகப்படுத்தியுள்ளது. இலவசமாக கிடைப்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ள இந்த செயலியில், செபமாலை செபிக்கும் முறை மற்றும் நற்செய்தியை தியானிக்கும் வழிகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்கபட்டுள்ள இக்கருவி, திருஅவையின் சிறந்த ஆன்மீகப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இக்கருவியில் கை வளையல் போன்ற அமைப்பில், பத்து செபமாலை மணிகள் மற்றும், ஒரு சிலுவை, உள்ளன்.

திருத்தந்தையின் உலகளாவிய செப வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் 175ம் ஆண்டு கொண்டாட்டத்தின்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியதுபோன்று, திருஅவையின் தூதுரைப் பணியின் மையம் செபம் என்பதை வலியுத்தும் விதமாக. இந்த சிறப்பு தூதுரைப் பணி மாதத்தில், இந்த புதிய முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# உணவை வீணடிக்கும் கலாச்சாரத்தை முடிவுக்கு கொணர

இவ்வுலகைக் குறித்த போதிய அறிவோடும், முடிவுற்ற வாழ்வு குறித்து போதிய அறிவின்றியும் வாழ்கிறது இக்கால சமூகம் – திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி.

உணவை வீணாக்கும் கலாச்சாரத்திற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்து தன் டுவிட்டர் செய்திளை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எங்கள் அன்றாட உணவை எமக்குத் தாரும் என இறைவனை நோக்கி வேண்டும் நாம், உணவை வீணடிக்கும் கலாச்சாரத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என விண்ணப்பிப்பதாக திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி அமைந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், டுவிட்டர் செய்தியில், மரணத்தை அழித்து உயிர்த்த உண்மை கடவுளும் உண்மை மனிதருமான இயேசு. அனைத்து மனங்களிலும் உயிர்த்தெழ ஆவல் கொள்கிறார். தீமைகளால் காயமுற்றிருந்தாலும், எவரும் கடவுளிடமிருந்து இவ்வுலகில் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டவர்களாக தீர்ப்பிடப்பட முடியாதவர்கள் என்ற சொற்களைப் பதிவுசெய்துள்ளார்.




With Best Compliments from

# JAMES STREET
## MEDICAL CENTRE
## BULK BILING

**Mr. Stephen Sellathurai** CPA.,

**Dr. Anne Sellathurai** M.B.B.S., F.R.A.C.G.P.

11/63 James Street Dandenong VIC 3175 Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924

jsmc_anne@hotmail.com




# புது வெளிச்சம்

ஒளி தோன்றுக இது தான் உலகைப் படைக்கும் போது இறைவன் சொன்ன முதல் வார்த்தைகள். ஒளியைப் படைப்பதும், இருளிலிருந்து ஒளியைப் பிரிப்பதும் இறைவனுடைய நோக்கமாய் இருந்தது.

ஒளியை நோக்கிய பயணமே ஆன்மீகப் பயணம். நானே ஒளி என்றார் இயேசு. அந்த ஒளியாம் இயேசுவை நோக்கிய பயணமே ஆன்மீகப் பயணம்.

இறைமகன் இயேசுவின் பிறப்பு ஒளியின் வருகையே. அந்த ஒளியின் வருகையைக் குறிப்பிடும் போதும் வானிலிருந்து ஒரு நட்சத்திர ஒளி தோன்றி ஒளியாம் இறைவனை சுட்டிக் காட்டியது. பிற இனத்தாருக்கும் இருள் அகற்றும் ஒளியானவராக இறைமகள் தோன்றினார்.

கிறிஸ்து பிறப்பு விழாவானது பெரும்பாலும் அடையாளங்களை விஸ்வரூபம் எடுக்கச் செய்து, அர்த்தங்களை வலுவிலக்கச் செய்வதாகவே இருக்கிறது. குடில்களை மாளிகைகளாக்கி, மாளிகையை மாபரனை பகட்டின் பக்கங்களில் படுக்க வைக்கிறது.

நட்சத்திரங்களும், குடில்களும், கிறிஸ்மஸ் மரங்களும் புடைசூழ கந்தையில் பிறந்த பாலகனை, கரன்சியில் பிறக்க வைப்பதா கிறிஸ்மஸ். உண்மையில், கிறிஸ்து பிறப்பு கொண்டு வருகின்ற செய்தி என்ன? சொல்லித் தரும் பாடம் என்ன?

**பிறரன்பு :**

பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (மத்தேயு 7:12) என்றார் இயேசு. இதை ‘ எர்ப்க்ங்ய் தன்ப்ங‘ ஆங்கிலத்தில் என்கிறார்கள். இயேசுவின் பிறப்பு நமக்குச் சொல்லித் தருகின்ற முக்கியமாக பாடம் இது தான். தன்னைப் போல பிறரை நேசிப்பதில் இருக்கிறது வாழ்வின் மகத்துவம். வாழ்க்கை என்பது பூமராங் போல. எதை எறிகிறோமோ அதுவே நம்மை திரும்ப வந்தடையும். அன்பை வீசக் கற்றுக் கொள்வோம், அப்போது அன்பு நம்மை நோக்கி திரும்ப வரும்.

**மன்னிப்பு :**

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார் (மத்தேயு 6:14) என்றார் இயேசு. இறைமகன் வருகையின் நோக்கமே, மனுக்குலத்திற்கான மன்னிப்பு தான். நமக்கு இறைவன் தந்த மாபெரும் மன்னிப்பின் சாரலாக நாம் பிற மனிதர்களுடைய குற்றங்களை நிபந்தனைகளின்றி மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மன்னிப்பை விதைக்க கற்றுக் கொள்வோம், அப்போது உறவின் பூக்கள் மலர்ந்து வரும்.

**பணிவு :**

உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறார் எவரும் உயர்த்தப்பெறுவர் (மத்தேயு 23:11) என்றார் இயேசு.

இறைமகனின் வருகை பணிவின் அடையாளமாய் இருந்தது. தந்தையிடமிருந்து வந்தவர், கந்தையிடம் தஞ்சமானார். ஆண்டவராய் வந்தவர் ஆடிடையே அடைக்கலமானார். சீடர்களின் பாதங்களைக் கழுவியதானாலும் சரி, பரமனின் பாதத்தில் சரணடைந்து சிலுவையில் அறையுண்டதானாலும் சரி, பணிவைப் புறகணித்த பணிகள் எதையும் இயேசு செய்யவில்லை. பணிவை அணியக் கற்றுக் கொள்வோம், செயல்கள் நன்றாய் சிறந்து வரும்.

**நிராகரிப்பு :**

உடலின் இச்சைகளுக்கு உங்களைக் கீழ்ப்படியச் செய்யும் பாவம் சாவுக்குரிய உங்கள் உடலின் மீது ஆட்சி செலுத்தவிடாதீர்கள் (ரோமர் 6:12)

பாவத்தை நிராகரித்து வாழ்கின்ற வாழ்க்கையை இயேசு வாழ்ந்து காட்டினார். சாத்தான் சோதனைகளை அவர் முன்னால் அடுக்கடுக்காய் நீட்டிய போதும் அவர் சலனப்படவில்லை. அவற்றை நிராகரித்து வாழ்ந்தார். பாவத்தை நிராகரிப்பதில் நாகரீகம் பார்க்கத் தேவையில்லை. பிறர் மனம் புண்படுமே என பாவத்தை அங்கீகரிக்கவும் தேவையில்லை. நாம் பாவத்தை நிராகரிக்கும் போது, இயேசுவை அங்கீகரிக்கிறோம். இயேசுவை அங்கீகரிக்கும் போது கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ளதாய் மாற்றுவோம்.

**அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்**

# SYNERGY'S CURRY COURT

Srin Lankan Indian Take away and Dine-in
We cater for all occasions
at most competitive price

Shop 33, 314-360 Childs Road, Millpark,
At Stables Shopping Centre.
Ph: 03 9437 8000

Trading Hours :
Tue-Sun : 11.30 a.m. - 9 p.m.
Monday Closed



# SYNERGY SPICE

a fully stocked up your one stop
Indian Srilankan Grocery Store
Direct Importers & Wholesalers

**open 7 days**

**Ph : 03 9404 4488**

at Millpark
Shop 45, 314-360 Childs Road, Millpark
at Stables Shopping Centre

at Delahey
Shop 1/350 Taylors Road,
Delahey, Ph. (03) 9364 5844

# இயேசுவின் பிறப்பு

எல்லா பயணங்களும் ஒரு
முதல் புள்ளியின் நீளல்களே
பிறந்தபின் சிறந்தவராவர் மனிதர்
பிறப்பே சிறப்பானது
இறைமகன் பிறப்பில் தான்.
கலிலேயாவின் நாசரேத்தில்
கன்னியாயிருந்த மரியாளுக்கு
கபிரியேல் தூதர்
வான் வாழ்த்தொன்றை வழங்கினார்.
கன்னியான உமக்குள்
கடவுள் அவதரிப்பார்.
மரியாளின் மனதுக்குள்
அணையாது எரிந்தது அந்த
சம்மனசு சொன்ன சங்கதி.
மரியாள் இன்னும் தாயாராக
தயாராகவில்லை.
ஆண் வாசனை அறியாத
என் வாசலுக்குள் ஓர்
ஆன்மீகக் குழந்தை அவதரிக்குமா
இதெப்படிச் சாத்தியம்
இல்லாமையிலிருந்து ஓர்
இறைமகனின் அவதாரம்
பலவீனமாகி விட்டதா என பயந்தார்.
திருமணமே முடியாமல்
கரு உருவானதில் கவலைப் பட்டார்.
வேருக்குள் விழுந்திருக்கும் விஷயம்
ஊருக்குள் விழுவதற்குள்
மறைவாய் விலக்கி விடுதல்
நிறைவானது என்று
உள்ளுக்குள் முடிவெடுத்தார்.
இரவுத் தூக்கத்தில் கடவுளின் தூதர்
அவருடைய கனவின் கதவைத் திறந்தார்.
சந்தேகத்தின் கதவை மூடினார்.
தூய ஆவியால் தாயானவன் தான் மரியாள்
பிறக்கும் பாலனுக்கு
இயேசு என்று பெயரிடு தூதர் விளக்கினார்.
வந்திருப்பது அவமானமல்ல,
வெகுமானம் என்பதை
குதூகலத்தோடு குறித்துக் கொண்டார்.
கடவுளின் சித்தம்,
எனக்குத் தேவை நித்தம் என்றார்,
ஓர் வரலாற்றுக்குத் தந்தையாகும்
வரம் பெற்றார். கன்னிக்குப் பிறப்பான்
ஏளனப் பார்வைகள் என்
கற்புக் கதவை சந்தேகப் படாதா
ஆயிரம் கேள்விகளை வினாடிக்குள் இழுத்து,
அத்தனை கேள்விகளையும்
அந்த வினாடியின் முடிவில்
ஒடித்துப் போட்டது மரியின் உறுதி.
கோடி மக்களுக்குக் கிடைக்காத பாக்கியம்
தேடி வந்திருக்கிறதே என பிரமிப்புப் பூக்களை
விழிகளில் பயிரிட்டாள்.
சஞ்சலத்தின் வேர்களை வெட்டிவிட
சம்மதம் செய்தாள்.
மண ஒப்பந்தமாகியிருந்த மரியாள்,
மன ஒப்பந்தமும் கொண்டாள்.
புதியவனை உள்ளுக்குள் பதியம் கொண்டு,
பூமிக்கு புதிய ஓர் தாயானாள்.
கணவனாகக் காத்திருந்த
யோசேப்பு அதிர்ந்தார்.
கவலை நெற்றியை தேய்த்தார்.
சந்தேகத்தின் செந்தீயில் கண்களைத் தீய்த்தார்.
மரியாளின் கற்புக் கதவு தீர்க்கத் தரிசனங்களின்
தீர்க்கமான முடிவின் துவக்கம் தான்
இறைமகன் வரவின் விளக்கம்.
பிறப்பின் காலம் பிறந்தது.
அப்போது வான் தந்த நட்சத்திரம்
ஒன்றுக்கு வால் வந்தது.
வானத்து நட்சத்திரங்கள் எல்லாம்
செதுக்கிய முனைகளோடு நகர,
நட்சத்திரம் வால் நீட்டி
சூரியன் பூமியில் இருக்கிறான் என
சுட்டிக் காட்டியது. தூரத்து விடிவெள்ளி ஒன்று
ஈர நிலா பூமியில் இருப்பதை
விரல்கள் நீட்டி விளக்கியது.
இயற்கையே இறங்கி வந்து
குடிலில் கிடந்த கொட்டில் மகனைச் சுட்டியது.

**அனைத்து உறவுகளுக்கும்**
**கிறிஸ்மஸ் மற்றும்**
**புது வருட வாழ்த்துக்கள்...**

**அன்புடன்**
**மிருணாளினி கமிலஸ்**

# தருமம் செய்யத் தயக்கம் ஏன்???

உனக்குரிய செல்வத்துக்கு ஏற்பத் தருமம் செய். உன்னிடம் மிகுயாகச் செல்வம் இருப்பின், மிகுயாகச் கொடு; சிறிது செல்வமே இருப்பின், சிறிது கொடு; ஆனால் தரும்ம செய்யத் தயங்காதே

தோபித்து 4:8

எனது பால்ய கால கிராமத்தில் நிறைய பலா மரங்கள் உண்டு. ஏகப்பட்ட பலாப் பழங்களை கிளைகளெங்கும் சுமந்தபடி அவை காட்சியளிக்கும். சில பலா மரங்களில் கிளைகள் வெறிச்சோடிக் கிடக்கும். ஆனால் நெருங்கிச் சென்று பார்த்தால், பூமிக்கு வெளியே தெரியும் அதன் வேர்களில் பலாப்பழம் காய்த்திருக்கும்.

பாட்டி சொல்வார், வேணும் சக்க வேரிலயும் காய்க்கும் என்று. அதாவது காய்க்க வேண்டும் என முடிவெடுத்தால் பலாப்பழம் வேரில் கூட காய்க்கும். காய்க்க வேண்டாம் என முடிவெடுத்தால் கிளைகளில் கூட காய்க்காது. காலங்கள் கடந்தபின்னும், பாட்டி மறைந்தபின்னும் அந்த சக்க பழமொழி மட்டும் இன்னும் நெஞ்சில் நிலைக்கிறது.

நிறைய பணம் உள்ளவன் அள்ளி அள்ளிக் குடுப்பான், நம் கிட்டே என்ன இருக்கு குடுக்கிறதுக்கு? என புலம்பும் பலரைப் பார்த்திருப்போம். உதவும் மனமின்மையை சாக்குப் போக்குக்குள் புதைத்து நடக்கும் மனநிலை இது. காரணம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாத நிலை அல்ல, கொடுப்பதற்கு மனம் இல்லாத நிலை .

கொடுக்க வேண்டும் எனும் சிந்தனை மட்டும் இருந்தால் போதும், கொடுப்பதற்கான பொருள் நம்மை தேடி வரும் என்பது தான் உண்மை. இருப்பதில் கொடு எனும் சிந்தனையை தோபித்து நூல் நமக்குந் சொல்கிறது. "இது இருந்தால் தான் கொடுப்பேன் என்பது எதிர் சிந்தனை, எது இருந்தாலும் கொடுப்பேன் என்பது விருப்பச் சிந்தனை. கொடுக்கும் சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும்".

நிறைய செல்வம் இருந்தால் நிறைய கொடுக்கலாம், கொஞ்சமே கொஞ்சம் செல்வம் மட்டுமே இருந்தால் அதிலிருந்து கொஞ்சம் கொடுக்கலாம். எப்படியானாலும் கொடுத்தேயாக வேண்டும் என்பதையே இந்த இறை வார்த்தைகள் விளக்குகின்றன.

கொடுக்கும் அளவை இறைவன் பார்ப்பதில்லை. ஏழை விதவையின் இரண்டு காசு தான் இறைவன் பார்வையில் முதல் பரிசைப் பெற்றது. இறைவன் கொடுக்கும் பொருளை நிறுத்துப் பார்ப்பதில்லை, கொடுக்கும் இதயத்தை நிறுத்துப் பார்க்கிறார். அதற்கு நாம் சேமிக்க வேண்டியது செல்வத்தையல்ல, கொடுக்க வேண்டும் எனும் மனநிலையை.

நமது வேண்டுதல்கள் பொருட்களைக் கொடும் இறைவா என்பதை விட, கொடுக்கும் மனதைக் கொடுப்பாய் இறைவா என்றிருந்தலே சிறப்பானது. அது தான் நம்மை விண்ணகத்தின் பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

வாய்க்காலில் எவ்வளவு தண்ணீர் வருகிறது என்பதை விட, அது வயலுக்குச் செல்கிறதா என்பதையே முதலில் விவசாயி பார்ப்பான். அணைகளில் தேங்கும் ஆயிரம் அடி தண்ணீரை விட, வயல்களில் பாயும் நாலும் குடம் தண்ணீர் தான் முக்கியமானது.

சேமித்தபின்னே செலவழிப்பேன் எனும் சிந்தனை ஆபத்தானது. களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்குவதை விட, இதயத்தின் சுவர்களை விசாலமாக்குவதே அவசியமானது.

இருப்பதை கொடுப்போம். இருப்பதில் கொடுப்போம்.
அதுவே இறைவாக்கு, அதை நீ நிறைவாக்கு!

# கண்டிப்பு ...

பயிற்றுவிக்கப்படாத குதிரை முரட்டுத்தனம் காட்டுகிறது.
கட்டுப்பாடில்லாத மகன் அடக்கமற்றவன் ஆகிறான்.
தன் மகனிடம் அன்பு கொண்டிருக்கும் தந்தை அவனை
இடைவிடாது கண்டிப்பார்
அப்போது அவர் தம் இறுதி நாள்களில்
மகிழ்வோடு இருப்பார்

சீராக் 30 : 8,1

எனக்கு அப்போது ஐந்து வயது இருக்கும் என நினைக்கிறேன். பக்கத்து வீட்டிலிருந்து நாலணாவை மிக சாதுர்யமாகத் திருடி விட்டேன். என்னுடைய திறமையை நானே மெச்சிக்கொண்டு முதலில் அம்மாவிடம் கொண்டு போய் காட்டினேன்.

எங்கேயிருந்து எடுத்தே என்று கேட்டார் அம்மா. அப்போது நாலணா என்பது எங்கள் வீட்டிவ் பெரிய பணம்.

பக்கத்து வீட்ல இருந்து நைசா எடுத்தேன் பெருமிதத்துடன் சொன்னேன்.

பாராட்டு கிடைக்கும் என எதிர்பார்த்து நின்ற எனக்கு பளார், பளார் என ரெண்டு அடி தான் கிடைத்தது. அப்படியே தரதரவென இழுத்துக் கொண்டு போய் அந்த வீட்டில் விட்டார்கள்.

எங்கேயிருந்து எடுத்தியோ அதே இடத்துல வெச்சுட்டு, மன்னிப்பு கேட்டுட்டு வா என்றார் அம்மா.

என்னுடைய முதல் உழைப்பு வீணாய் போன விரக்தியிலும், முதல் சம்பளம் பயனில்லாமல் போன ஆதங்கத்துடனும் நான் அதைச் செய்து முடித்தேன்.

அன்றைய அந்த அடியும், திருத்தலும் திருட்டு என்பது தவறு என்பதைப் புரிய வைத்தது. அதற்கான அங்கீகாரம் எனது வீட்டில் கிடைப்பதில்லை என்பதும் புரிந்தது.

எனது வாழ்க்கைப் பயணத்தில் நான் என் பெற்றோரிடம் ஒன்றோ இரண்டோ தடவை தான் அடி வாங்கியிருக்கிறேன். அந்த தருணங்களே மிக மிக முக்கியமானவை. அவை தான் என்னை திருத்தியிருக்கின்றன. சரியான பாதைக்குத் திருப்பியிருக்கின்றன.

நான் வகுப்பில் முதல் மாணவனாக வரவில்லை என்பதற்காகவோ, பக்கத்து வீட்டுப் பையனை விட குறைவாக மார்க் எடுத்தேன் என்பதற்காகவோ நான் அடி வாங்கியதில்லை. திருடினேன், கீழ்ப்படியவில்லை போன்ற காரணங்களுக்காக மட்டுமே தண்டனை வாங்கியிருக்கிறேன்.

பிள்ளைகளைத் தண்டித்தும், கண்டித்தும் வளர்க்க வேண்டும் என விவிலியம் நமக்கு பல இடங்களில் வலியுறுத்துகிறது. சீராக்கின் நூலும் அதே சிந்தனையையே பிரதிபலிக்கிறது. தம் மகனை நன்னெறியில் பயிற்றுவிப்பவர் அவனால் நன்மை அடைவார் என்றும், உன் மகனுக்கு நற்பயிற்சி அளி; அவனைப் பயன்படுத்த முயற்சி செய். அப்போது அவனது வெட்கங்கெட்ட நடத்தையால் நீ வருந்தமாட்டாய் என்றெல்லாம் சீராக நமக்கு சிந்தனைகளை விதைக்கிறது.

பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்துவது என்பது எதை நோக்கி என்பதில் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் நடத்தை, குணாதிசயம், ஆன்மிகம் போன்ற இலக்குகளை நோக்கிய திருத்தல்களே மிக முக்கியம். நாமோ பல வேளைகளில், நமது விருப்பங்களுக்கு ஏற்ப பிள்ளைகள் வரவில்லையேல் தண்டிக்கிறோம். நமது சுயநலத்துக்கும், நமது ஈகோவின் நிறைவேறுதலுக்கும் பிள்ளைகள் ஒத்துழைக்க வில்லையேல் கண்டிக்கிறோம். நமது கனவுகளைச் சுமந்து செல்லும் புரவிகளாய் அவர்கள் இல்லையேல் அடிக்கிறோம்.

பிள்ளைகளை கண்டித்தும் தண்டித்தும் வளர்த்துவோம். அது நமது கோபத்தின் வெளிப்பாடாய் இல்லாமல் அன்பின் வெளிப்பாடாய் இருக்கட்டும். அது அவர்கள் நல்லவர்களாகவும், நன்மை செய்பவர்களாகவும், மனிதநேயம் உடையவர்களாகவும் வளரவேண்டும் எனும் நோக்கத்தோடு இருக்கட்டும்



# Ranjana Fashion

*Fascinating Shopping for you and your dear ones*





**258 Blackburn Road,**
**Glen Waverley,**
**3150 Victoria, Australia**

M : 0403 114 783 / 0433 334 489

P : 03 9803 3503

E : leopillaij@hotmail.com

# எது வாழ்வுக்கான வெளிச்சம்

இந்தக் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல இஸ்ரயேல் வீட்டாரே, நீங்கள் கையில் இருக்கின்றீர்கள் (எரேமியா 18 : 6)

குழந்தை குயவன் கை களிமண்ணைப் போன்றவர்கள். அவர்களை வனைவது யார் என்பதில் தான் அவர்களுடைய எதிர்காலம் அடங்கியிருக்கிறது. கைதேர்ந்த குயவனின் கையில் களிமண் கிடைக்கும் போது அது அழகிய பாண்டமாக வடிவெடுக்கிறது. கையாலாகாதவனின் கையில் அது வெறும் மண்ணாய் உதிர்ந்துவிடுகிறது.

ஒரு குழந்தையை வனைய, கடவுளின் விரல்களைப் போன்ற வலிமையான விரல்கள் எவ்வுலகிலும் இல்லை. அந்த விரல்களில் களிமண்ணை ஒப்படைக்கும் பொறுப்பு குழந்தைகளிடம் இருக்க வேண்டும்.

சரியான கைகளில், சரியான பருவத்தில் சரணடைகின்ற களிமண் தனது பிறவிப் பயனை அடைந்து விடுகிறது.

இன்றைய உலகில் எது வாழ்வுக்கான வெளிச்சம், எது அழிவுக்கான தீப்பிழம்பு என்பதைப் பற்றிய புரிதல் இல்லை. அவரவர் கையிலிருக்கும் விளக்கே உயர்வானது என்றே கருதிக் கொள்கின்றனர். இறைவனின் வெளிச்சத்துக்குள் உலவுவதை விட உலகத்தின் வெளிச்சப்பாதையில் உருண்டு புரண்டாலே போதும் என புரிந்து கொள்கின்றனர்.

உலகம் தனது வசீகர வலையில் உலகின் கவர்ச்சிகளை இணைத்து நீட்டுகிறது. அதை விட்டு விட்டு, வலப்பக்கமாக வலைகளை வீசுங்கள்

**பெற்றோர்களே,**

போதும். திரைகடல் ஓடித் திரிய வேண்டிய குழந்தைகளை, டிஜிடல் திரைகளின் வெளிச்சக் கயிறுகளால் கட்டியது போதும். கற்களை அப்பமாய் மாற்ற மறுத்த இறைவனின் சொற்களை அப்பமாய் பெற்றுக் கொள்ளும் காலம் இது.

நுனிப்பல் கிறிஸ்தவர்களாகவும், ஏட்டுச் சுரைக்காய்களாவும் வாழ்ந்த காலம் போதும். இனி வருகின்ற தலைமுறையை வாழும் கிறிஸ்தவர்களாகவும், கனிகொடுக்கும் மரங்களாவும் வளர்ப்போம்.

**பிள்ளைகளே,**

உண்மையான ஆனந்தம் இறைவார்த்தையில் இருக்கிறது. இறை வாழ்க்கையில் இருக்கிறது. அதை புரிந்து கொள்ளும் வரை உலக சிற்றின்பங்கள் நம் கால்களைச் சுற்றிக் கொள்ளும். காலைச் சுற்றும் தேவையற்ற கேளிக்கைகளை விட்டுத் தள்ளுவோம். இதயத்தைச் சுற்றும் இறைவார்த்தையை பெற்றுக் கொள்வோம்.

# அவர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்

பூவுக்குள் வாசத்தைப் பதுக்கி வைத்தவர்
நெஞ்சுக்குள் நேசத்தை நிரப்பி வைத்தவர்
பாருக்குள் பாதத்தை எடுத்து வைத்தவர்
பாவியென் பாவத்தை முடித்து வைத்தவர்

ஒரு சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.
வாசனைத் திரவியங்களை வாங்கும் போது, அதை முகர்ந்து பார்த்து தேர்வு செய்கிறோம், ஆடை எடுக்கச் செல்லும்போது அணிந்து பார்த்து முடிவு செய்கிறோம். உணவு எப்படி இருக்கிறது என்பதை சுவைத்துப் பார்த்து தெரிந்து கொள்கிறோம்.
எதுவுமே நாம் அனுபவித்துப் பார்க்கும் போது தான் அதன் உண்மையான சுவையும், இனிமையும் விளங்கும். எத்தனை சோர்வாக இருந்தாலும் கண்ணை மூடாமல் தூங்கத் தான் முடியுமா அப்பாடித் தான், இறைவனைச் சுவைக்காமல் இறைவனை முழுமையாய் அறிந்து கொள்ளவும் முடியாது.
இறைவனைப் பற்றி அறிவது வேறு, இறைவனை அறிவது வேறு
என்னதான் பக்கம் பக்கமாய்ப் பாடம் எடுத்தாலும் அனாதை இல்லத்திலே இருக்கின்ற ஒரு குழந்தைக்கு தந்தையின் அன்பு புரியுமா? என்ன தான் அருவியில் குளிப்பது ஆனந்தம் என்றாலும் நனையாமல் அதை ரசிக்க முடியுமா? இறைவனை சுவைப்பதும் அப்படியே.
இறைவனின் இயல்புகளை, இறைவனின் பேரன்பை,
இறைவனின் கருணையை, இறைவனின் தாழ்மையை,
இறைவனின் மேன்மையை, எல்லாவற்றையும் படிப்படியாக அறிந்து கொள்ள நாம் அவரை சுவைத்துப் பார்க்க வேண்டும்.
ஒரு உணவை சுவைக்கும் போது அது நமது உடலுக்குள் செல்கிறது. பின் செரிமானம் அடைந்து உடலுக்கு தேவையான சக்தியாக மாறுகிறது.
இறைவார்த்தைகளும் நமது உடலுக்குள் சென்று செரிமானம் அடைந்து உடலின் சக்தியாக மாறவேண்டும். அப்போது அது நமது உடலின் பாகமாக அது மாறிவிடும்.
இயேசு மனிதனாக இந்த மண்ணில் வாழ்ந்த காலத்தில் அனைத்தையும் தந்தையின் விருப்பப்படியே செய்தார். செபத்தின் கரத்தைப் பற்றிக் கொண்டார்.

**மேன்மையின் உச்சமான அவர்,**
**தாழ்மையின் மிச்சமாய் மாறிப்போனார்**

**கால்பிடித்து வாழும் சமூகத்தில் அவர்**
**கால்களைக் கழுவி தனது பணிவினைப் பறைசாற்றினார்.**
**தெய்வத்தின் பிள்ளையான அவர்,**
**மனிதனின் மகனாக வாழ்ந்தார்,**
**பூமிக்கு இறங்கி வந்த அவர்,**
**மனிதருக்காய் இரங்கி வந்தார்.**

வாசனை திரவியத்தை பூசிக்கொண்ட மனிதன் நடக்கும் இடங்களெல்லாம் வாசனை வலம் வரும். இயேசுவை சுமந்து செல்லும் மனிதன் செல்லுமிடமெல்லாம் இயேசுவின் வாசனை வலம் வரும்.

காது சுந்தர்சிங் சீக்கிய குடும்பத்தில் பிறந்தவர், எட்டு வயதிலேயே பகவத் கீதையைப் படித்து முடித்தவர். பதின்மூன்று வயதில் வேதங்களை கரைத்து குடித்தவர். கிறிஸ்தவனின் நிழல் தன் மீது விழுந்ததற்காய் ஓடிப் போய்க் குளித்தவர். நண்பர்களோடு சேர்ந்து பைபிளை எரித்து எரித்து சிரித்து மகிழ்ந்தவர்.

அவரை இயேசு சந்தித்தார். அவர் பைபிளை வாசிக்க ஆரம்பித்தார். இயேசுவை சுவைக்க ஆரம்பித்தார். பின்னாளில் அவர் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தார் என்பதை நாம் நன்கு அறிவோம். இந்தியாவில் நற்செய்தி அறிவிப்பில் அவருடைய பங்களிப்பை கிறிஸ்தவ உலகம் அறியும். இயேசுவை ருசிப்பவர்கள், பொது வாழ்வில் இருந்தாலும் புது வாழ்க்கையைத் தான் வாழ்வார்கள்

மகாத்மா காந்தி பைபிளை வாசித்தபோது அவருக்குள் புதிய மாற்றங்கள் நிகழ்ந்ததாக ஒருமுறை குறிப்பிட்டார். இயேசுவை சுவைத்தவர்கள் அந்த சுவையில் லயிக்காமல் இருக்க முடியாது.

ஜாதி, மத, இன, மொழி, பால் பேதங்களைக் கடந்து யாவரையும் ஆட்கொள்ளும் வசீகரம் இறை உணர்வுக்கு உண்டு. நானே வானிலிருந்து இறங்கி வந்த உணவு என்றார் இயேசு என்னை உண்டு, என் இரத்தத்தை குடியுங்கள் என்றார் இயேசு.

இயேசுவை சுவைக்கும் போது தான் அவர் எவ்வளவு மகத்துவமானவர் என்பது தெரியும், ஆனால் எல்லாம் கூடும் எனும் உண்மை புரியும், அவர் எவ்வளவு நல்லவர், எவ்வளவு அன்பானவர் என்பது தெரியும். அவரை சுவைக்கும் போது தான், அவரே நமது ஒரே நம்பிக்கையும், இரட்சிப்பும் என்பது புரியும்

இயேசுவை அவரது வார்த்தைகளினால் ருசிப்போம்
இயேசுவே நமது வாழ்க்கையென வசிப்போம்
நமது வாழ்க்கை சுவை பெறும்.
சுவை பெறும் வாழ்க்கை பிறருக்கும் சுவை தரும்.

# அவல் கேசரி

நம் வீடுகளில் பண்டிகைக்கு மட்டும் தலையைக் காட்டும் அவலின் அளவில்லா நன்மைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா? தெரிந்திருந்தால் நிச்சயம் அது உங்கள் வீட்டின் சமையலறையில் ஒரு அங்கம் ஆகி இருக்கும். அவல் உடல் சூட்டை தணித்து, நல்ல புத்துணர்ச்சியைத் தருகிறது. அது உடலுக்கு உறுதியையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது. தனித்து உண்ணும் போதே நல்ல ருசியாக இருக்கும் அவலை, விதவிதமாக உணவு வகைகளாக சமைத்தும் உண்ணலாம்.

## தேவையானவை



2 கப் அவல்
1 கப் சர்க்கரை
3 சிட்டிகை கேசரி பவுடர்
1 டேபிள் ஸ்பூன் முந்திரி
1/2 கப் நெய்
1/2 டீஸ்பூன் ஏலக்காய்தத்தூள்

## செய்முறை

அவல், முந்திரியை 2 டீஸ்பூன் நெய் விட்டு பொன்னிறமாக வறுக்கவும்.

முக்கால் டம்பளர் தண்ணீரில் கேசரி பவுடரை கரைத்து, அதில் அவலை சேர்த்து வேக விடவும்.

வெந்து கெட்டியானதும் சர்க்கரை, மீதமுள்ள நெய் சேர்த்து கிளறவும்.

# ஓன் மின்ட் கேக்



## தேவையான பொருட்கள்

மைதா மாவு – மூன்று டீஸ்பூன்
கோக்கோ பவுடர் – இரண்டு டீஸ்பூன்
பேகிங் பவுடர் – கால் டீஸ்பூன்
குக்கிங் சோடா – இரண்டு சிட்டிகை
மில்க் மேய்டு – மூன்று டீஸ்பூன்
எண்ணெய் – இரண்டு டீஸ்பூன்
டிரிங்கிங் சோடா – 30 மில்லி லிட்டர்
சாக்கோ சிப்ஸ் – சிறிதளவு
மினி சாக்லேட் பால்ஸ் – சிறிதளவு

## செய்முறை

மைதா மாவு, கோக்கோ பவுடர், பேகிங் பவுடர், கூக்கிங் சோடா ஆகியவற்றை சேர்த்து சளித்து கொள்ளவும்.

பின், ஒரு கிண்ணத்தில் சளித்த மாவு, மில்க் மேய்டு, எண்ணெய், டிரிங்கிங் சோடா ஆகியவற்றை சேர்த்து நன்றாக ஒரு சேர கலந்து ஒரு கிளாஸ்யில் ஊற்றி மைக்ரோ வேவ் ஓவன்னில் ஒரு நிமிடம் வைத்து எடுத்து அதன் மேல் சாக்கோ சிப்ஸ் மற்றும் சாக்லேட் பால்ஸ் போட்டு பரிமாறவும்.



# கிறிஸ்மஸ் கேக்

ஒரு சுவையான மற்றும் எளிதான செய்ய கூடிய கிறிஸ்தும கக்.
சிறுவர்களுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் பிடிக்க கூடிய ஒரு கேக் இது.



## தேவையான பொருட்கள்

- 300 கிராம் மைதா
- 250 கிராம் சர்க்கரை
- 4 முட்டை
- 1 கிராம் பேக்கிங் பவுடர்
- 150 கிராம் பட்டர்
- டுட்டி ப்றுடி தேவைக்கேற்ப
- திராட்சை தேவைகேற்ப
- வன்னில கலர் தேவைகேற்ப
- 50 கிராம் முந்திரி
- 50 கிராம் செர்ரி
- 50 கிராம் வால்நட

## செய்முறை

* ஒரு பாத்திரத்தில் மைதா மாவை தெளித்து கொள்ளவும்.
* இதனுடன் திராட்சை, முந்திரி சிறிதாக வெட்டி சேர்த்துகொள்ளவும்.
* வன்னில கலருடன் உருகிய பட்டர் மற்றும் சர்க்கரை சேர்த்து கொள்ளவும்.
* அதனுடன் முட்டை சேர்த்து நன்றாக கலக்கவும்.
* இந்த கலவை எடுத்து மைக்ரோ அவன் பாத்திரத்தில் 120 டிகிரி சூட்டில் அரை மணி நேரம் வைக்கவும்.
* சூடான சுவையான கிறிஸ்மஸ் கேக் ரெடி.






அன்பான வாசகர்களே,

இது விழாக்காலம். நம் உள்ளங்கள் நம் மண்ணில், நாம் விட்டு வந்த நம் உறவுகளை எண்ணி எண்ணி ஏங்கும் காலம். பாலன் இயேசு நம் உறவுகளையும், நட்புகளையும் நம் எண்ணங்களாலும் அன்பினாலும் இணைத்து ஆறுதல் அளிக்கட்டும்.

சமீபத்தில் படித்த நல்ல கதை ஒன்றை உங்களோடு பகிர்ந்திட விரும்பி கதையை இணைத்திருக்கின்றேன்.

மகிழ்ச்சியான கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.
ஆசீர்வாதமான புத்தாண்டு வாழ்த்துக்கள்

அன்புடன்
நிர்மலா அல்போன்ஸ்

# "அறநீர்"

அப்பாவிற்கு ஆரம்பத்தில் இருந்தே இந்த வேலை பிடிக்கவில்லை.

பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த போது நான் நர்ஸிங்கில் சேருகின்றேன் என்ற போது கடுமையாக எதிர்த்தார்.

எனக்கு அந்த சேவை மீது அளப்பறிய ஆவல் இருந்தது. அதே போல, கிட்டத்தட்ட அதே போல இப்போது இந்த வேலை. சைக்காலஜியில் முதுகலை பெற்றிருந்தேன் அந்த சமயம் தான் இந்த நிறுவனத்தில் இருந்து பணிக்கு அழைத்தார்கள். பணி என்றாலும் இது ஒரு சமூகத்திற்கான சேவை தான்.

தி சர்வீஸ் என்கிற நிறுவனம் அது. முழுக்க முழுக்க சேவை மனப்பான்மை கொண்ட நிறுவனமா அல்லது லாப நோக்கத்தில் செயல்படும் நிறுவனமா என்று என்னால் கணிக்க இயலவில்லை.

பீடிகை இல்லாமல் அது என்ன நிறுவனம் எனச் சொல்லிவிடுகிறேன். வயதானவர்களை இந்தியாவில் விட்டுவிட்டு அயல்நாடுகளுக்கு செல்பவர்கள் பயன்படுத்தும் சேவை இது. எங்கள் நிறுவனத்தில் வயதானவர்களுக்கான சகல சேவைகளும் உண்டு.

ஈமேயிலில் தங்கள் தந்தை தாயின் தகவல்கள், வீட்டு முகவரி ஆகியவற்றை கொடுத்துவிடுவார்கள்

நாங்கள் தினமும் அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும்.

தினசரிகளை அவர்களே கவனித்துக்கொள்வார்கள். அவர்களுக்கான Emotional Balance ஐ கொடுக்கும் பணியில் தான் நான் அமர்த்தப்பட்டேன்.

இறுக்கமாக இருக்கும் அவர்களிடம் பேச வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் சுமார் ஒரு மணி நேரம் இருந்தால் போதும்.

மாலை அலுவலகம் திரும்பி அன்று சந்தித்த நபர்கள், அவர்களின் நிலை பற்றி சின்ன அறிக்கையை அலுவலகத்தில் கொடுத்திட வேண்டும்.

இந்த சேவை என்று மட்டுமல்ல அவர்களுக்கு உடல்நல கவனிப்புகள், இதர சேவைகள் (வெளியே சென்று பில் கட்டுதல்) ஆகியவையும் எங்கள் நிறுவனத்தில் உண்டு.

வாரத்தில் ஒருமுறை அவர்களின் பிள்ளைகளுக்கு பெற்றோர்களின் நிலை அனுப்பப்படும். எந்தெந்த சேவை தேவையோ அதற்கு ஏற்றார் போல பணம்.

ஆரம்ப நாட்களில் மிகவும் செயற்கைத்தனமாக இருந்தது. அவர்களிடம் செயற்கையாக நலம் விசாரிப்புகள். ஆனால் ஒரு வாரத்திலேயே ஒருவித நெருக்கம் எல்லா பெரியோர்களிடமும் ஏற்பட்டுவிட்டது.

ஒதுக்கப்பட்டது என்னவோ ஒரு மணி நேரம் தான் ஆனாலும் கணக்கு வழக்கில்லாமல் அவர்களிடன் செலவழிக்க ஆரம்பித்தேன். அவர்களின் விருப்பங்கள் விசித்திரமாகவே இருக்கும் ஆனால் மிக மிக எளிதானவை தான்.

தாமோதரன் சாருக்கு அவருடன் வாக்கிங் போக வேண்டும்.

சரஸ்வதி அம்மாவிற்கு அவர்களுடன் சில நிமிடங்களாவது தாயம் ஆட வேண்டும்.

மோசஸ் தம்பதிக்கு அன்றைய அரசியல் செய்திகளைப் பற்றி பேசிட வேண்டும்.

சின்னச்சின்ன ஆசைகள் தான். சைக்காலஜி படித்திருந்ததால் பேசியே அவர்களின் ஆசைகளை கேட்டுவிடுவேன்.

ஆனால் நாயர் சார் மட்டும் இதுவரைக்கும் எதுமே கேட்டதில்லை. கேட்ட கேள்விக்கு கூட பதில் சொல்லமாட்டார். எங்களுக்கு ஏற்கனவே பயிற்சி கொடுத்திருந்தார்கள். பெரியவர்கள் காட்டமாக நடந்து கொள்வார்கள். ஆனாலும் பொறுமையாக இருக்கவேண்டும் என்று.

நாயரின் மனநிலையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

வழக்கமாக செல்லும் நேரத்தில் எனக்காக டீ மட்டும் போட்டு வைத்து மேஜையில் எனக்காக அமர்ந்திருப்பார்.

பெரும்பாலான நேரங்கள் தன் மனைவியின் புகைப்படத்தின் முன்னர் அமர்ந்து இருப்பார். எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டதில்லை. அவர் பேசினால் அது அனேகமாக கொஞ்சம் மலையாளம் கலந்த தமிழில் தான் இருக்கும் என்பது என் யூகம்.

அவர்கள் முன் மகிழ்வாக இருந்தாலும், அலுவலகம் திரும்பி ஒவ்வொருத்தர் பற்றிய குறிப்புகள் எழுதும்போது கண்ணீர் கோபமும் நிச்சயம் வந்துவிடும்.

ஆயிரம் ஆயிரம் கேள்விகள் அவர்கள் பிள்ளைகள் மீது எழும். ஆனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை குற்றவாளி கூண்டில் நிறுத்துவதே இல்லை. "அவர்கள் வாழ்கையை அவர்கள் வாழ்கின்றார்கள்" என்றே தொனியிலேயே அவர்கள் பேசுகிறார்கள். அதுவும் சரி தான் என்றும் தோன்றும்.

சாந்தா என்னுடைய ஜூனியர். நானும் அவளும் வாரத்திற்கு மூன்று முறையேனும் யாராவது கதையைச் சொல்லி அழுதுவிடுவோம்.

மெல்ல மெல்ல எனக்கு வெளிநாடு மீது வெறுப்பும் வராமல் இருக்கவில்லை.

அப்பா தீவிரமாக வரன்களை தேடிக்கொண்டு இருந்தார். அவருக்கு மிகுந்த கோபம் என்மீது. கைகூடிவந்த ஒரு வரனை நான் நிராகரித்துவிட்டேன்.

காரணம் மாப்பிள்ளை போனில் சொன்ன தகவல் தான். "ரெண்டு பேரும் பாரின் போய் செட்டிலாகிடலாம்". நிம்மதியா காசு பார்க்கலாம் என்பதுதான்.

வாழ்க்கை கவிதைப் போல ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் மொத்த உலகமும் ஸ்தம்பிக்கும்படியாக செய்தி வந்தது. சைக்கிளில் சென்ற அப்பா விபத்தினை சந்தித்தார். ICU வில் சேர்த்துவிட்டார்கள் டாக்டர்கள்

எங்கே அடி என்ன ஆனது என்றும் சொல்லவில்லை. யாரையும் பார்க்கவும் அனுமதிக்கவில்லை.

வரன் பார்க்கத்தான் எங்கோ போயிருக்கார். அவர் பையில் இருந்த மாப்பிள்ளை போட்டோக்கள் அதையே காட்டியது.

அலுவலகத்திற்கு தகவல் சொல்லிவிட்டேன். கையில் இருந்த மொத்த காசும் கட்டிவிட்டேன்.

மருத்துவமனையில் சேர்த்த இரண்டு மணி நேரத்தில் "நான் கவனித்துக் கொள்ளும் பெரியவர்கள் எல்லோரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள்". இதனை நான் எதிர்பார்க்கவேயில்லை.

அலுவலகத்திற்கு செய்தி சொன்னதும் அவர்கள் இன்று நான் வீட்டிற்கு நேரடியாக வர இயலாது என தகவல் சொல்லி இருக்கின்றார்கள். எல்லோரும் மருத்துவமனை விலாசம் கேட்டுவிட்டு வந்துவிட்டார்கள்.

ஒரு சுவாரஸ்யம் என்னவெனில் வந்திருந்தவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் தான்.

அவர்களை இணைக்கும் இரண்டு புள்ளிகள். ஒன்று முதுமை மற்றொன்று நான். ICU வாசலில் ஒருத்தருக்கு இவ்வளவு பேரா என விரட்டிவிட்டார்கள். எல்லோரையும் எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தேன்.

சரஸ்வதி அம்மா ஒரு ப்ளாஸ்கில் டீ எடுத்து வந்திருந்தார். ஆனால் அவர் இத்தனைப் பேரை எதிர்பார்க்கவில்லை.

அவர்கள் எல்லோரும் எளிதில் நண்பர்களாகிவிட்டார்கள். தங்கள் கதைகளையும் மருத்துவமனை அனுபவங்களையும் பேச ஆரம்பித்துவிட்டார்கள். தாமோதரன் சாரும் மோசஸ் சாரும் பேசுவதை பார்த்தே மனதிற்கு இதமாக இருந்தது. மருந்து மாத்திரைகள் பழக்கப்பட்டு இருந்தாலும் இந்த ஆஸ்பிட்டல் வாசம் ஏனோ பிடிக்கவே இல்லை.

மாலையில் தான் நாயர் சார் வந்தார். என்னிடம் என்ன விபத்து என்றெல்லாம் விசாரிக்கவில்லை. நேராக முதன்மை டாக்டர் அறைக்குச் சென்றார். அன்று தான் நாயர் ஒரு டாக்டர் என்ற விஷயம் தெரியும். ரிப்போர்ட்டுகளை பலவந்தமாக பேசி வாங்கி எல்லா டாக்டர்களுக்கும் டோஸ்விட்டார். ஏதோ சொதப்பி இருக்கின்றார்கள். உடனே மருத்துவமனை பரபரப்பானது. என்னிடம் வந்து ஆப்பரேஷன் உடனடியாக செய்யனும் ஐம்பதாயிரம் கட்டுங்க என்று சொல்லிவிட்டனர். கையிருப்பு தீர்ந்துவிட்டது.

அலுவலகத்தில் கேட்டதற்கு பெரிய ப்ராசஸஸ், இன்று கிடைக்காது என்று சொல்லிவிட்டார்கள். தோழிகளுக்கு ஃபோன் அடிப்பதற்குள் சரஸ்வதி அம்மா பில்லை பிடுங்கி பணம் கட்டச் சென்றார்.

"நாளைக்கு பணம் வந்ததும் கொடுத்திடறேம்மா"

"நான் கேட்டேனா?" என்றார் புன்னகைத்தபடியே.

அந்த நொடி தான் உடைந்து போனேன். ஆஸ்பிட்டலில் "மனங்களின் மனதினை கமழ்வதை நுகர்ந்தேன்". எதற்காக இந்த வேகமான ஓட்டம் என்றே புரியவில்லை. எதனை எதிர்பார்கின்றது மனது? இன்னொரு அதிர்ச்சி காத்து கொண்டிருந்தது.

உடனடி ஆப்பரேஷன் என்பதால் உடனடியாக ரத்தம் தேவை என்று சொல்லிவிட்டார்கள். ரத்தம் கொடுத்தது நாயர் சார் தான். ரத்தம் கொடுத்தவர் மெல்ல நிதானமாக வெளியே வந்தார். காபி வாங்கிச் சென்றேன். வரண்டாவில் அமர்ந்தார். அருகினில் அமர்ந்தேன்

அவர் என் கையைப் பற்றி

"காலையிலேயே, இந்த அப்பாகிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமில்ல"

வழிந்தோடியது அறநீர்...

(குழந்தைகளுக்கான எழுத்தாளர் **விழியன்** அவர்கள் எழுதியது)




ஊரெங்கும் உற்சாக கோலாகலம் நள்ளிரவு வானத்தை ஒளிமயமாக்குகின்ற வாணவேடிக்கைகள் விருந்து அரங்குகளில் உல்லாச ஆரவாரங்கள் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இத்தனை கொண்டாட்டங்களுக்கும் காரணம், புத்தாண்டுப் பிறப்பு ஆம் புதியதொரு ஆண்டு பிறக்க இருக்கின்றது. பழைய ஆண்டு ஒன்று முடிவடைந்து, புதிய ஆண்டு ஒன்று மலர்கின்றது. சுற்றமும், நட்பும் சூழ நாம் மகிழ்ந்து கொண்டாட இருக்கின்றோம். கொண்டாட்டாங்களோடு கூட, இது நாள் வரை நாம் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வேண்டிய வேளையும் இதுவே.

கடந்த ஆண்டிலே கடவுளிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளையும், புதிய ஆண்டிலே வரவிருக்கின்ற நலன்களையும் நன்றியோடு நினைத்து பார்த்திட சரியான தருணம், இந்த புத்தாண்டு பிறக்கின்ற நேரமே. நிறைவடைந்த ஆண்டில் நம்மோடு வழித்துணையாக வந்து எல்லா நினைவுகளிலும் உடனிருந்து காத்த இறைவனுக்கு நன்றி சொல்வோம். கடந்த 365 நாள்களையும் சிறப்பானதாக ஆக்கித் தந்த உறவினர் நண்பர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுவோம். சென்ற ஆண்டில் நிகழ்ந்தவற்றில் வெற்றிகளும் இருக்கலாம், தோல்விகளும் இருக்கலாம். வெற்றிகளுக்கு உதவியாக இருந்தவர்களுக்கும் தோல்வியில் துணைநின்றவர்களுக்கும் தவறாமல் நன்றி சொல்லுவோம்.

இறைவாக்கினர் எசாயா நூலின் 43 ஆம் அதிகாரம் 18,19 ஆகிய வசனங்களில் கடவுளில் கடவுள் இவ்வாறு உரைக்கிறார். "முன்பு நடந்தவற்றை மறந்துவிடுகள். முற்கால நிகழ்ச்சி பற்றிச் சிந்திக்காதிருங்கள்; இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றிவிட்டது; நீ அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா பாலைநிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன்; பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்".

பழைய ஆண்டை கடந்து புதிய ஆண்டுக்குள் நுழைகின்ற நாம் பழைய நினைவுகளை, மனக்கசப்புகளைக் களைந்துவிட்டு, புதியதொரு வழிமுறையில் நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம். கடந்த காலத்தில் நம்மைக் காயப்படுத்திய நபர்களை, நிகழ்வுகளை மன்னித்து மறக்கவும், புதிய உறவுகளை கனிவோடு ஏற்றுக் கொள்ளவும் தயாராவோம். நமது வாழ்க்கைப் பாதையை சீரமைத்துக் கொள்வதற்கு இந்த 2020 நமக்கொரு வாய்ப்பை தந்திருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

எதிர்வரும் நாள்களை வளமானதாக்குகின்ற வாக்குறுதிகளோடு இந்த புத்தாண்டு மலர்ந்துள்ளது. எதுவும் எழுதப்படாத 365 வெற்று பக்கங்களைக் கொண்ட புத்தகத்தைப் போல புதிய ஆண்டு பிறக்கின்ற வேளையில், அதில் எழுதுவதற்கான எழுதுகோல் நம் கையில் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். வெறுமையாக இருக்கின்ற இந்த புத்தகத்தின் பக்கங்களிலே நேர்த்தியான கதையொன்றை எழுதுகின்ற வாய்ப்பும், பொறுப்பும் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டிலே இறைவன் நமக்கு தரவிருக்கின்ற ஆசீரை இறைவாக்கினர் எசேக்கியேல் நூலில் 36ஆம் அதிகாரம் 25 முதல் 27 வரையிலான வசனங்கள், கீழ்கண்டவாறு எடுத்துரைக்கின்றன. "நான் தூய நீரை உங்கள்மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்; உங்கள் எல்லா சிலை வழிபாட்டுத் தீட்டையும் அகற்றுவேன். நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லாலான இதயத்தை எடுத்துவிட்டு, சதையாலான இதயத்தை பொருத்துவேன். என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைப் கடைப்பிடிக்கவும் என் நீதிநெறிகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன்".

பிறக்க இருக்கின்ற புத்தாண்டிலும் உமது அருள்துணை எம்மோடு இருப்பதாக! எங்கள் வாழ்க்கைப் பயணத்தின் ஒவ்வொரு நிலையிலும் நாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவுகளிலும் உமது தூய ஆவியாரின் உடனிருப்பு எம்மை வழி நடத்துவதாக! உமது ஞானமும், வல்லமையும் இடையறாது எம்மில் நிலைத்திருப்பதாக! இந்த புத்தாண்டில் உங்கள் இதயங்களும், மனங்களும், வாழ்வின் எல்லா அம்சங்களும் புதுப்பிக்கப்படுவதாக! இதன் பயனாக எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் பழையன கழிந்து புதுப் பிறப்படைவதாக! உமது அன்பும், சமாதானமும் இந்தப் புத்தாண்டு முழுவதும் எம்மோடு இருப்பதாக! ஆட்சியும், வல்லமையும், மாட்சியும் என்றன்றும் உமக்கே, ஆமென்.




அனைத்து உறவுகளுக்கும் இதயங்கனிந்த கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்...

NONNA'S CUCINA



**ADDRESS**

40 CROCKFORD STREET,

PORT MELBOURNE, VIC 3207

**CONTACT**

(03) 9646 1061

eat@nonnaknowsbest.com.a





# பல உயிர்கள் உயிர்த்துரந்த உயிர்ப்பு ஞாயிறு



ஏப்ரல் 21 - ஈஸ்டர் ஞாயிறு அன்று இலங்கையில் நடந்த குண்டு வெடிப்புகள் கண்டனத்திற்குரியது, ஆழ்ந்த கவலைக்குரியது. ஏப்ரல் 21 காலை 8.45 மணியில் இருந்து இலங்கையில் தேவாலயங்களிலும் நட்சத்திர விடுதிகளிலும் குண்டுகள் வெடிக்கத் தொடங்கின, ஏசு உயிர்த்தெழுந்த திருநாள் அன்று தேவாலயங்களில் வழிபாட்டு நேரத்தில் மக்கள் கூடி இருக்கும் வேளையில் பொதுமக்களைக் கொல்வதை இலக்காக்கி நடத்தப்பட்ட இத்தாக்குதல்கள் யாவும் ஐயத்திற்கிடமின்றி பயங்கரவாத நடவடிக்கையாகும்.



கொழும்பில் கொச்சிக்கடையில் உள்ள அந்தோனியார் தேவாலயத்திலும், நீர்கொழும்பில் உள்ள செபஸ்டியன் தேவாலயத்திலும், மட்டக்களப்பில் உள்ள ஜயோன் தேவாலயத்திலும் குண்டு வெடித்தன. அதுமட்டுமின்றி வெளிநாட்டுக்காரர்கள் தங்கக் கூடிய கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதிகளான சாங்கிரி-லா, கிரிக்ஸ்பரி, சின்னமன் கிராண்ட் விடுதிகளிலும் குண்டுகள் வெடித்தன. காலை 8.45 மணிக்கு தொடங்கி 9.05 மணிக்கு இடைப்பட்ட 20 நிமிடங்களில் இந்த ஆறு இடங்களிலும் குண்டுகள் வெடித்துவிட்டன.



பின்னர் பிற்பகல் 1.45 மணி அளவில் தேசிய விலங்கியல் பூங்காவுக்கு அருகில் உள்ள தேஹிவாலா என்ற இடத்தில் குண்டு வெடித்தது. டெமடகோடா என்ற இடத்தில் குடியிருப்புப் பகுதி ஒன்றில் காவல்துறை தேடுதல் வேட்டையில் இருந்த போது மனித வெடிகுண்டு வெடித்து மூன்று காவலர் பலியாயினர். மொத்தமாக காலை 8.45 இல் இருந்து பிற்பகல் 2.15 மணிக்குள் எட்டு குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. இதில் ஏழு மனித வெடிகுண்டு தாக்குதல்களாகும். பல 100 பேர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதல் ஏசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் ஈஸ்டர் தினத்தைக் குறிவைத்து திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட ஒன்று என்பதும் வெளிநாட்டுக்காரர்கள் தங்கக் கூடிய நட்சத்திர விடுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட ஒன்றுமாகும். இதன் மூலம் சர்வதேச கவனம் பெற வைப்பது இத்தாக்குதலின் நோக்கமாகும். உலகில் பல நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். போப் அரசர் தொடங்கி ஐ.நா. செயலர் வரை கண்டனம் தெரிவித்துள்ளனர்.



இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் பொறுப்பேற்றுள்ளது. தனது அமக் செய்தி ஊடகத்தின் மூலம் இத்தாக்குதலை நிகழ்த்தியவர்கள் இஸ்லாமிய அரசின் போராளிகள் என்று சொல்லியுள்ளது.

உயிர்த்தெழுந்த திருநாளில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்காக செபிப்போம். ஆனால் கொல்லப்படுகின்ற மனித நேயமும், மனித பண்பும், சன நாயகமும் உயிர்தெழுந்தால் ஒழிய மனித குலத்திற்கு உய்வில்லை.

UnitedHomes
AUSTRALIA
*Concept to Creation*

සංකල්පය නිර්මාණය කිරීම

ਵਿਚਾਰ ਤੋਹ ਨਿਰਮਾਣ ਤਕ

உங்கள் கனவு எங்கள் படைப்பு

विचार से निर्माण तक

**Leading Custom Home Builder In Melbourne**



**Services We Offer**

- New Homes
- Town Houses
- Commercial Construction
- French Provincial Homes



**Rex Path**
**0410 009 035**

Office :- 12 Jovic Road, Epping
Display:- 10 Muse Blvd, Truganina

**Amit Sofat**
**0426 022 965**



# 4 SIMPLE WAYS TO LIVE UP CHRISTMAS

## GIVE AT LEAST ONE SPIRITUAL GIFT

Give a spiritual gift (e.g. a book) to someone who needs it.




## ATTEND CHRISTMAS MASS

Go to Mass to celebrate the Birth of our Lord! Invite your family to come as well.

## PRAY THE CHRISTMAS NOVENA

It's a simple and beautiful way to prepare our hearts. Invite your family and friends to pray as well.

## LEAVE THE DECORATIONS UP UNTIL THE 10TH

Christmas time doesn't end until january 10th, Feast of the Baptism of the Lord

# TRADEMARK LOGISTICS INTERNATIONAL PTY LTD

Total Logistics Solutions

## Air Freight ● Sea Freight

**Customs Clearance ● Quarantine Clearance**

**Storage ● Warehousing ● Distribution**

**Cartage ● Insurance**

**Project Management**

**Personnal Effects**




**1st Floor 75 Fulton Drive, Derrimut Vic 3030.**

Please Contact Michael on Mob: 0433 672 833

Ph: 9338 6277 Fax: 8360 7212

E:Info@trademarklogistics.com.au

**www.Trademarklogistics.com.au**

flydubai FNC FREIGHT NETWORK CORPORATION FM FREIGHTMIDPOINT

# christmas List

1. ~~Buy a~~ Be present
2. Wrap ~~my presents~~ The ones I love with a hug
3. Send ~~Postcards~~ peace & good wishes
4. ~~Buy~~ Give away Food to the Poor
5. ~~Get New~~ Give away Clothes
6. ~~See~~ Be the Christmas ~~lights~~ light

---

**ANNUAL TAMIL CHRISTMAS MASS,**

*Cultural Events followed by dinner (Admission Free):*

*December 15, 2019 at 4 pm - 8.30 pm*

**@ St Johns Parish Church Hall, Mitcham.**

No: 494 Whitehorse road,Mitcham.
VIC 3132.

**NEW YEAR MASS** *in Tamil (Midnight Service):*

*December 31, 2019 at 11.30 pm*

**Service commence with Rosary,**
**Thanks Giving and Adoration**

**HOLY MASS** *in Tamil at 12.00 am.*

*Venue:* **St.Pascal Seminary Church,**

100 Albian Road, Box Hill